சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 50/2022

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. வசந்தா<br>க/பெ. ராமதாஸ் | நாள். 28.10.2025 |
| வயது. 58 | தொழில் |
| கிராமம். செங்காட்டூர் | வட்டம். |

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் மனுவில் முதல் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. என்னுடைய வெளியேற்றுக் குறிப்புரை ம.த.சா.ஆ.2. சாய் கிருபா மருத்துவமனையில் வழங்கிய வெளியேற்றுக் குறிப்புரை ம.த.சா.ஆ.3. என்னுடைய ஆதார் அட்டையின் ஒளி நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.4. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் ம.த.சா.ஆ.5 முதல் 7. என்னுடைய விபத்துப் பதிவேட்டு நகல் ம.த.சா.ஆ.8. என்னுடைய இயலாமைச் சான்றிதழ் அசல் ம.த.சா.ஆ.9. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) ம.த.சா.ஆ.1 ல் நானும், என் கணவரும் சாலையைக் கடக்கும்பொழுது விபத்து எற்பட்டதாக என் கணவர் அளித்த புகாரின்பேரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய். ம.த.சா.ஆ.1ல் உள்ள விவரங்கள் பொய் என்று அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. என் கணவர் உயிருடன் உள்ளாரா

என்றால் அவர் இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார், இன்று என்னை அவர்தான் அழைத்து வந்தார். என் கணவரிடம் ஏன் தவறாக புகார் அளித்தார் என்று இன்று வரை கேட்கவிலலை. ம.த.சா.ஆ.1ல் கண்ட விவரங்கள் உண்மை என்பதால் தான் நான் அவரிடம் அது குறித்து கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விபத்து சம்மந்தமாக விபத்து சம்மந்தாக சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்து காலை 10.30 மணி அளவில் நடந்தது. முதல் தகவல் அறிக்கையில் 10.45 என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன்.

3) என்னை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. ம.த.சா.ஆ.8ல் நான் சுயநினைவுடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்து வந்தேன். எனக்கு எவ்வளவு கூலி என்றால் தினமும் ரூ.500 அல்லது ரூ.1000/- வரும். நான் முதலில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலும் பின்னர் புதுவை தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றேன். எனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ம.த.சா.ஆ.8 ல் எனக்கு வெறும் சொற்ப காயங்கள் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் புதுவை சாய் கிருபா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் அங்கு இரண்டு நாள்கள் இருந்தேன். நான் எலும்பு முறிவுக்கு அங்கு சிகிச்சை எடுத்தேனா என்றால் ஆமாம். ம.த.சா.ஆ.3ல் எலும்பு முறிவு சிகிச்சை ஏதும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.8ல் விபத்து 9.30 மணிக்கு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், என் கணவரும் புக்கத்துறை கூட்டு ரோடில் கவனக் குறைவாககவும், அஜாக்கிரதையாகவும் சாலையைக் கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. பணம் அதிகம் பெறுவதற்காக காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) ம.த.சா.ஆ.7 ஓட்டுநர் உரிமம் படி 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு விபத்து

சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த விவரத்தை மறைக்க வேண்டி பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதை நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகைகள் மிக அதிகம் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அனைத்தும் சொற்ப காயங்கள் என்றால் சரியல்ல. என் கணவர் அளித்த புகாருக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு அதிகபட்ச செலவுத் தொகையுடம் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.